

அருப்புக்கோட்டையில் 1.152 பயனாளிகளுக்கு 1.57 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்டங்களை மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் வழங்கினார். உடன் சேர்மன் சுப்பா ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஷாகுல் ஹமீது, முன்னாள் நகர மன்றத் தலைவர் சிவபிரகாசம், நகரச் செயலாளர் ஏ. கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி, ஒன்றியச் செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ் ஆகியோர் இருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா குளக்கரை தெரு, அனகாபுத்தூரில் பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார் தலைமையில் நடைபெற்றது. கே.சந்திரன், எஸ்.கே. நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன்,இரா. பாபுஜி, க.சுந்தர மூர்த்தி, மு.நித்தியானந்தம் ஆகியோர் முன்னிலையில் துணை மேயர் கோ.காமராஜ், மாநகர கழக அவைத்தலைவர் இரா.நரேஷ்கண்ணா எம்.சி. ஆகியோர் வரவேற்பில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., தலைமைக் கழக பேச்சாளர்கள் குடியாத்தம் புவியரசி, கா.பார்கவி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை மற்றும் பலர் பங்கேற்றனர்.

### அண்ணா பல்கலை. மாணவி அளித்த புகாரின் பேரில் உடனடி நடவடிக்கை!

# மாணவர்கள் அல்லாதவர்கள் பல்கலைக் கழகங்களில் நுழைய கட்டுப்பாடுகள்!

### பல்கலைக் கழகங்களில் உதவி மையங்கள் அமைக்கப்படும்! உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் பேட்டி!

சென்னை, டிச. 28-

அண்ணா பல்கலை. மாணவி அளித்த புகாரின் ' பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், மாணவர்கள் அல்லாதவர்கள் பல்கலைக்கழகங்களில் நுழைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்றும்,

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் மாணவ, மாணவிகளுக்கு உதவி மையம் அமைக்கப்படும் என்றும், உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.



சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கல்லூரிகளின் முதல்வர்கள், பேராசிரியர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கோவி.செழியன், அண்ணா பல்கலைக்கழக மாணவி அளித்த புகாரின் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். பாலியல் புகார் தொடர்பான விசாரணைக்கு அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வித்துறை முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும், மாணவர்கள் அல்லாதவர்கள் பல்கலைக்கழகங்களில் நுழைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று கூறினார்.

### காஞ்சி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் – துணை முதல்வர் பிறந்த நாள்!

# நீர் நிலைகள் காப்போம் - மரம் நடுவோம் விழிப்புணர்வு மாராத்தான் போட்டி!

### டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைக்கின்றனர்! கே.ஆர்.ஆனந்தன் தலைமை!

சென்னை, டிச.28-

காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் சார்பாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நீர் நிலைகளை காப்போம் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்போம் என்ற விழிப்புணர்வு மாபெரும் மாராத்தான் போட்டி ஆலந்தூர் தெற்கு பகுதியில் பாலாஜி நகர் கே.ஆர்.ஜி. கார்டனில் நடைபெறுகிறது.

போட்டியை தா.மோ. அன்பரசன் (காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் குறு சிறு நடுத்தர தொழில்துறை அமைச்சர்) டி.ஆர்.பாலு எம்.பி., ஆர்.எஸ்.பாரதி போன்ற முக்கியஸ்தர்கள் பங்கேற்று போட்டியை துவக்கி வைக்கின்றனர்.

காஞ்சி வடக்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.ஆனந்தன் தலைமை தாங்குகிறார்.

இதில் என்.சந்திரன் 12வது மண்டல குழு தலைவர் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் மற்றும் ப.குணாளன் ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் வரவேற்பில்

இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாநில சுற்றுச்சூழலின் துணை அமைப்பாளர் சாய் ஜெயகாந்த் பாரதி, 165வது வட்ட செயலாளர் கே.ஆர். ஜெகதீஸ்வரன், 163வது வட்ட செயலாளர் அ.வேலவன், 163வது மாமன்ற உறுப்பினர் திருமதி பூங்கொடி ஜெகதீஸ்வரன், மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் நிர்வாகிகள் மு.வாசிம் ராஜா, ப. பிரசாத், டி.எம். உமாசங்கர், அனகை ப. டானியல், சந்துரு, ஆ.இராஜன் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

நிகழ்ச்சியில் ஏழு பிரிவுகளாக 70 வெற்றியாளர்களை தேர்ந்தெடுக்கிறார்கள். ஒரு பிரிவுக்கு 10 வெற்றியாளர்கள் என்ற விதத்தில் போட்டி நடைபெறுகிறது. 70 வெற்றியாளர்களை தேர்ந்தெடுக்கும் முதல் மாரத்தான் போட்டித் துவங்கும்.

இந்தப் போட்டி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நீர் நிலைகளை காப்போம்... மரக்கன்றுகள் நட்டு வளர்ப்போம்... என்ற விழிப்புணர்வு மாபெரும் மரத்தான் போட்டி தொடர்ந்து 4ம் ஆண்டாக நடைபெறுகிறது. இப் போட்டியில் பங்கு பெறும் அனைவருக்கும் பதக்கம், டிஷர்ட், சான்றிதழ் உணவு மரக்கன்று செல்பி போட்டோ 360 கேமரா போன்றவை சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கிறது.

இந்த போட்டியில் பெருமளவில் பொதுமக்கள் ஆண்டுதோறும் பங்கேற்கிறார்கள் இந்த போட்டியில் அனைவரும் பங்கேற்கலாம் பங்கேற்க விரும்புவார்கள் சிறிய அளவில் நுழைவு கட்டணமாக செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

காரணம் போட்டியாளர்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த போட்டியில் சரியான விதிமுறைகள் பின்பற்றப்படுகின்ற.

போட்டியில் பங்குபெறும் அனைவருக்கும் இலவச மரக்கன்று சுற்றுச்சூழல் மாற்றிய விழிப்புணர்வு போன்ற காணொளிகள் ஒளிபரப்பப் படுகின்றன நிகழ்ச்சி அனைத்தையும் காஞ்சி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி செய்கிறது.

நிகழ்ச்சியில்பங்கு கொள்ள விரும்புவர்கள் 9841086513 இந்த எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

### சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு! இன்று (28-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகள்!



### மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

| வ. எண் | வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 101வது | க.கோவிந்தராஜ் வட்டக் கழக செயலாளர் | ஆர்.வி.நகர், 'D' பிளாக் அண்ணாநகர் கிழக்கு சென்னை– 102 | நாஞ்சில் சம்பத் தலைமைக்கழக பேச்சாளர் கீர்த்தனா தலைமைக் கழக இளம் பேச்சாளர் |
| 2 | 111அ | எஃப்.பீட்டர்ஜான் வட்டக் கழக செயலாளர் | ரங்கூன் வீதி, பத்தாரி சாலை, ஆயிரம்விளக்கு சந்திப்பு, மாலை முரசு அருகில் | கடலூர் புகழேந்தி தேர்தல் பணிக்குழு செயலாளர் தலைமைக்கழக பேச்சாளர் ராஜராஜேஸ்வரி தலைமைக் கழக இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே. சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

### 48 வது சென்னைப் புத்தகக் காட்சி

# “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் தலைமைக் கழக வெளியீடுகள்!

**48வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 டிசம்பர் 27 முதல் 2025 ஜனவரி 12 வரை நடைபெறுகிறது.**

**புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 392ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

# பாம்பன் புதிய ரயில் பாலத்தின் உறுதித்தன்மை!

### அதிகாரிகள் ஆய்வு!

ராமேஸ்வரம், டிச. 28-

ராமேஸ்வரத்தில் புதிய பாம்பன் ரயில் பாலத்தின் உறுதித்தன்மை குறித்து ரயில்வே அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

பாம்பன் ரயில் பாலம் கட்டப்பட்டு நூற்றாண்டு களை கடந்துவிட்ட நிலையில், பழைய பாலம் அருகிலேயே புதிய ரயில் பாலம் கட்டப்பட்டது. பாலத்திற்கான தூண்கள், தண்டவாளங்கள், கர்டர்கள், பாலத்தின் நடுவே கப்பல்கள், படகுகள் கடந்து செல்வதற்கு தூக்குப் பாலத்தை பொறுத்தும் பணிகள், முடிந்து புதிய ரயில் பாலம் வழியாக சரக்கு ரயில் சோதனை ஓட்டமும் நிறைவடைந்தது. இந்நிலையில், பாம்பன் புதிய ரயில் பாலத்தில் ரயில்வே மூத்த துணை பொது மேலாளர் சீனிவாசன் மற்றும் மூத்த பொறியாளர்கள் அன்பழகன், வேல்முருகன், தினேஷ் ஆகியோர் ஆய்வு செய்தனர். பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர்கள், புதிய ரயில் பாலத்தின் உறுதித்தன்மையில் எந்த பிரச்சனையும் இல்லை என்று கூறினார்.

### ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி

# வட்டக் கழக செயலாளர்கள் அவசரக் கூட்டம்!

### மா.பா.அன்புதுரை அறிக்கை!

சென்னை, டிச.28-

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (29.12.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10:00 மணிக்கு இளங்கோ சாலையில் அமைந்துள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் பகுதி அவை தலைவர் எம். ஆர்.ஐம்புலிங்கம் தலைமையில் தொகுதி பார்வை யாளர் வெ.கௌதமன் முன்னிலையில் நடைபெறு கிறது.

இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்க பணிகள்

இவ்வாறு ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை கேட்டுக் கொண்டுள்ளார்.



திருப்பத்தூரில் நடைபெற்ற சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார். முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் உட்பட கழக நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, 16வது வட்டம் குளக்கரை பகுதியில் அப்பாசாமி கண் மருத்துவமனை நடத்திய மாபெரும் கண் சிகிச்சை முகாம் மற்றும் கடப்பாக்கம் பகுதியில் எருக்கஞ்சேரி பவித்ரா மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மருத்துவர் சுரேஷ் தலைமையிலான குழு நடத்திய மாபெரும் மருத்துவ முகாம், 16 வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையிலும், மாவட்டத் துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பகுதி நிர்வாகிகள் கே. சிவசங்கரன், நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், பி. தரணி, எஸ். கருணாகரன், இ. அருள், வக்கீல் வெங்கடேசன், பரசுராமன், குமரவேல், புவனேஸ்வரி மகேஷ் குமார், சி. முத்தையா, ராஜ்மோகன், வி. மாரி, கே. எ. ரமேஷ், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கண் சிகிச்சை முகாமில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பரிசோதனை செய்து இலவசமாக கண் கண்ணாடிகளை பெற்றுச் சென்றனர். மருத்துவ முகாமில் 200க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்கு இலவசமாக மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டு, மகளிருக்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் சேலைகளை வழங்கினார் . இந்த நிகழ்ச்சியில் கடப்பாக்கம் மகேஷ் குமார், சாம்ராஜ், ஜெயபால், குளக்கரை எஸ். மஞ்சுநாதன், சௌந்தர்ராஜன், ரிஷி குமார், எலந்தனூர் வி. சிவபிரகாஷ், சடையங்குப்பம் நைனியப்பன், வேலு, வக்கீல் சுரேந்தர், கன்னியம்மன் பேட்டை தமிழ், காமராஜ் புரம் நாகலிங்கம், கிருபாகரன், எம். சுந்தர், சுந்தர், முகேஷ், மணலி புதுநகர் சி. எம். ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.